கலைஞர் 100
1924 - 2023

**சுருக்கம்**

தமிழர்திருநாள் தைப்பொங்கல் 2024 – பொங்கல் பரிசுத் தொகுப்பு - அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் முழுக் கரும்பு ஆகியவற்றுடன் ரொக்கத் தொகை ரூ. 1000/- சேர்த்து வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

## கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (டி1)த் துறை

அரசாணை (2டி) எண்.4

நாள்.09.01.2024
திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம்
மார்கழி 24- ஆம் நாள்

படிக்க:-

1. அரசாணை (2டி) எண். 1, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்(டி1) துறை நாள் . 02.01.2024.
2. அரசாணை (2டி) எண். 2, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்(டி1) துறை நாள் நாள் . 04.01.2024.
3. அரசாணை (2டி) எண். 3, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்(டி1) துறை நாள் நாள் . 08.01.2024.

-----

ஆணை:-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் இலங்கைத் தமிழர் மறு வாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் முழுக் கரும்பு வழங்க நிர்வாக அனுமதி வழங்கி நிதி ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் திருத்தங்கள் வெளியிடப்பட்டன.

3. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, மற்றும் முழுக் கரும்பு ஆகியவற்றுடன் சேர்த்து ரொக்கத் தொகை ரூ. 1000/- வழங்க நிர்வாக அனுமதி வழங்கி நிதி ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

4. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 09.01.2024 நாளிட்ட அறிவிப்பிற்கிணங்க, 2024 ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை தமிழ்நாடு மக்கள் சிறப்பாகக் கொண்டாடிட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பாக

1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் முழுக் கரும்பு ஆகியவற்றுடன் ரொக்கத் தொகை ரூ. 1000/- சேர்த்து வழங்கப்படும் என அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

5. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, 2024-ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை தமிழ்நாடு மக்கள் சிறப்பாகக் கொண்டாடிட கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது. :-

i. தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடிட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் (2,19,51,748) மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு (19,365) ஆக மொத்தம் 2,19,71,113 குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பாக 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, மற்றும் முழுக் கரும்பு ஆகியவற்றுடன் ரொக்கத் தொகை ரூ. 1000/- சேர்த்து வழங்கப்படும்;

ii. இதனால் அரசுக்கு ரூ. 2436,18,77,690/- (ரூபாய் இரண்டாயிரத்து நானூற்று முப்பத்து ஆறு கோடியே, பதினெட்டு இலட்சத்து, எழுபத்து ஏழாயிரத்து அறுநூற்று தொண்ணூறு மட்டும்) செலவினம் ஏற்படும். மேலும், பார்வை ஒன்றில் கண்ட அரசாணையில் ஒதுக்கப்பட்ட நிதி ரூ.238,92,72,741/- (ரூபாய் இருநூற்று முப்பத்து எட்டு கோடியே, தொண்ணூற்று இரண்டு இலட்சத்து, எழுபத்து இரண்டாயிரத்து, எழுநூற்று நாற்பத்து ஒன்று மட்டும்) மற்றும் பார்வையில் மூன்றில் கண்ட அரசாணையில் ஒதுக்கப்பட்ட நிதி ரூ.1828,05,98,062/- (ரூபாய் ஆயிரத்து எண்ணூற்று இருபத்து எட்டு கோடியே, ஐந்து இலட்சத்து, தொண்ணூற்று எட்டாயிரத்து, அறுபத்து இரண்டு மட்டும்) ஆக மொத்தம் ரூ.2066,98,70,803/- வழங்கப்பட்ட தொகையில் மீதித் தொகை **ரூ.369,20,06,887/-** க்கான நிர்வாக அனுமதி வழங்கி நிதி ஒப்பளிப்பு செய்யப்படுகிறது;

iii. இந்த செலவினம் 2023-24 வரவு செலவு திட்ட மதிப்பீட்டிலிருந்து மேற்கொள்ளப்படும்.

6. மேலே பத்தி 5இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:-

"3456 – 00 - நுகர்பொருள் வழங்கல் 103 நுகர்வோர் உதவித் தொகைகள் – மாநிலச் செலவினங்கள் – AE பொது விநியோக முறை உதவியுடன் சமூகப் பாதுகாப்பு - உணவு உத்திரவாதம் 311 மானியங்கள் – 02 – பொதுவான மானியம் ".

(IFHRMS த.தொ.கு (3456 – 00 – 103 – AE – 31102)

7. மேலே பத்தி 5இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பின்வரும் வைப்பீட்டு கணக்கின்கீழ் வரவு வைப்பதற்கு ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மை திட்ட நடைமுறையின்படி சரிகட்டும் பட்டி தயாரிப்பதற்கு முதன்மைச் செயலாளர்/ ஆணையாளர், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை-5 அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| K | - | வைப்பீடுகளும் முன் பணங்களும் |
| (b) | - | வட்டி பெறாத வைப்பீடுகள் |
| 8443 00 | - | உரிமையியல் வைப்பீடுகள் |
| 800 | - | ஏனைய வைப்பீடுகள் |
| BJ | - | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் வைப்பீடுகள் |
| 801 | - | வரவுகள் |
| 02 | - | வட்டி பெறாதவை |

(IFHRMS DP Code 8443 00 800 BJ 801 02)

8. மேலே பத்தி 5இல் ஒப்பளிக்கப்படும் தொகையினை மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வாயிலாக செலவிட அதிகாரம் அளிக்கப்படுகிறது.

9. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண் 85/நிதி(கூ.உ-(ம)நு.பா)த் துறை/2024, நாள் 09.01.2024-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

கே.கோபால்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

**பெறுநர்**
முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை – 600005.
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை – 600010.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை -600 010.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை 600 018.
மாநில கணக்காயர்(தணிக்கை), சென்னை 600 018.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு ), சென்னை – 600 008.

**நகல்:-**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 60 009,
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள்
வழங்கல் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை
அமைச்சர் அலுவலகம், சென்னை - 600 009.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை
கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின்
தனிச்செயலாளர், சென்னை - 600009.
பொது (ம.வா) துறை, சென்னை - 600009.
நிதி (வ.செபொ . I/II/ கூ உ (ம) நு பா/வ.வ. I) த்துறை,
சென்னை - 600009.
தேசியத் தகவல் மையம், சென்னை - 600 009.
உதிரி/ இருப்புக்கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

09/01/24

பிரிவு அலுவலர்.

09/01/24